வன்னி மண்ணிலே மயில் குத்தாடுமா
இல்லை போராடுமா 2
கன்னிமயிலே நாட்டை பார்த்தாடம்மா நீயும் போராடம்மா

இசைவேண்டுமா ஈழ போரையே பாடு
ஈழத்தை நினைத்தே நீ தாளத்தை போடு 2

திசை நாலும் அதிர நீ தீம் தீம் என்றாடு
தேடம்மா உன்மண்ணின் விடுதலை தெடு

வன்னி மண்ணிலே மயில் குத்தாடுமா
இல்லை போராடுமா 2

கால்களை இழந்தாள் பார் களத்தில் ஓர் மங்கை
கண்ணே சொல் எதுக்கடி உன் காலில் சலங்கை
ஈழம் வாழ் கலைகளை படைக்கலன் ஆக்கு
எதிரியை நேர் நின்று தாக்கடி தாக்கு

வன்னி மண்ணிலே மயில் குத்தாடுமா
இல்லை போராடுமா 2

கோவிலில் ஆடிய காவடி முன்னே
குண்டுகள் வெடித்தன பாரடி கண்ணே
ஆயிரம் புயலாய் உன் வீரத்தைக்காட்டு
அருந்தமிழ் வீரத்தின் மானத்தை நாட்டு 2

வன்னி மண்ணிலே மயில் குத்தாடுமா
இல்லை போராடுமா 2

இசைத்தட்டு : வெற்றிக்காற்று
பதிப்பகம் : அகம்